# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2020-2021-ம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை

**(DMFT - Annual Budget)**

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை திட்டங்களின் வரவு செலவு அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது உருவாக்கப்பட்டு 31.03.2021-வரை **ரூ.3,51,48,303/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து முன்னூற்று மூன்று மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில் கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் முன்களப் பணியாளர்களாக பணியாற்றிய 9000 அரசு ஊழியர்களுக்காக விட்டமின் மாத்திரைகள், ஜிங்க் மாத்திரைகள் மற்றும் ஆர்சானிக் ஆல்பம் 30 ஆகியவற்றை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக வழங்க மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள். 07.07.2020-ன்படி ஆணையிடப்பட்டது. அதன்படி மேற்கண்ட மாத்திரைகள் வாங்குவதற்காக மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.3,33,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட 1 திட்டத்திற்கு கீழ்கண்டவாறு நிதி வழங்கப்பட்டுள்ளது

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | உலகாணி கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல் | உலகாணி / கள்ளிக்குடி | ரூ. 1,50,000/- | 12.09.2018 | நிறைவடைந்து விட்டது |

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட 1 திட்டத்திற்கு கீழ்கண்டவாறு நிதி கைவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் மின்விளக்குகள் அமைத்தல் | செல்லம்பட்டி / உசிலம்பட்டி | ரூ. 60,000/- | 12.09.2018 | கைவிடப்பட்டது |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியில் ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 ஆண்டிற்கு மட்டும் **ரூ.73,60,297/- (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)** கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.07/2018-டிஎம்எப்டி, நாள்.25.09.2018-ன்படி மூன்று வருட காலத்திற்கு தற்காலிக நியமனம் செய்யப்பட்ட தணிக்கையாளர், ந.க.எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்.17.08.2020 மற்றும் ந.க.எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்:16.11.2020-ன்படி தற்காலிக நியமனம் செய்யப்பட்ட கணக்காளர், கணிணி இயக்குபவர் மற்றும் நீதிமன்ற தொடர்பு அலுவலர் ஆகியோருக்கு **ரூ.2,52,052/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்)** ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் CCTV பொருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை **ரூ.2,38,650/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்)** செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% நிதியிலிருந்து 1% தொகையை கனிம அறக்கட்டளையின் மாநில அளவிலான கண்காணிப்பு பணிகளுக்காக பயன்படுத்த இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் மாதந்தோரும் செலுத்துமாறு அரசாணை பல்வகை எண்.112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2020 முதல் 31.03.2021

வரையிலான காலத்திற்கு வசூல் செய்யப்பட்ட தொகையில் 1% தொகையான **ரூ.77,453/-** (ரூபாய் எழுபத்து ஏழாயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3946/LC/2015, நாள்.17.03.2020-ன்படி ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% தொகையை தனி வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கி கணக்கு தொடங்கிய நாள் 26.09.2017 முதல் 31.03.2021 வரை நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை **ரூ.7,72,767 (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து ஏழு மட்டும்)** தனி வங்கி கணக்கிற்கு (மாநில பாரத வங்கி, வணிகவரி வளாக கிளை, **சேமிப்பு கணக்கு எண்.39383933861)** மாற்றப்பட்டுள்ளது.

2020-2021 நிதியாண்டில் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் பின்வருமாறு

**2020-2021**

| மாதம் | சீனியரேஜ் தொகை மூலம் பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | நீதிமன்றம் மூலம் அபராத தொகையாக பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | மொத்தம் (ரூபாயாக) |
|---|---|---|---|
| ஏப்ரல்-2020 | 0 | 0 | 0 |
| மே-2020 | 4,61,014 | 0 | 4,61,014 |
| ஜீன்-2020 | 5,66,890 | 0 | 5,66,890 |
| ஜீலை-2020 | 5,40,038 | 0 | 5,40,038 |
| ஆகஸ்ட்-2020 | 5,74,300 | 0 | 5,74,300 |
| செப்டம்பர்-2020 | 8,59,958 | 0 | 8,59,958 |
| அக்டோபர்-2020 | 8,20,539 | 0 | 8,20,539 |
| நவம்பர்-2020 | 6,12,611 | 0 | 6,12,611 |
| டிசம்பர்-2020 | 8,72,068 | 15,000 | 8,87,068 |
| ஜனவரி-2021 | 4,34,731 | 30,000 | 4,64,731 |
| பிப்ரவரி-2021 | 8,19,283 | 30,000 | 8,49,283 |
| மார்ச்-2021 | 7,23,865 | 0 | 7,23,865 |
| **மொத்தம்** | **72,85,297** | **75,000** | **73,60,297** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.